සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(I)**

காலம் - 03 மணித்தியாலங்கள்

**இலங்கையின் சட்ட முறைகள் - 01 - II**

විභාග අංකය
Index No / சுட்டெண்
......................................

- **முதலாவது வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்க.**

01. i. இலங்கையின் பொதுச் சட்டம் யாது?

ii. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதியுயர் நீதி நிர்வாக நிறுவனத்தை குறிப்பிடுக.

iii. நீதிமன்றக் கட்டளைச் சடடத்தின் 6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற வகை யாது?

iv. 1883 முதல் 1947 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு சட்டவாக்கத்துறையினால் இயற்றப்பட்ட சட்டங்கள் அழைக்கப்படும் பொதுப் பெயர் யாது?

v. பராமரிப்புக்கான கோரிக்கை எந்த நீதிமன்றத்தில் முன்வைக்கப்படல் வேண்டும்?

vi. மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நியமிக்க முடியுமான நீதிபதிகளின் எண்ணிக்கை யாது?

vii. உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஓய்வுபெற வேண்டிய வயதெல்லையை முறையே குறிப்பிடுக.

viii. ஆங்கிலச் சட்டம் இலங்கை சட்ட முறைக்குள் பிரவேசித்த முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

ix. தேசவழமைச் சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக..

x. நீதித்துறைச் சட்டத்தின் கீழ் தற்போது அமுலிலுள்ள ஆரம்ப நீதிமன்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 2×10 = 20)

02. i. உச்ச நீதிமன்றத்தின் அமைப்பைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

ii. உச்ச நீதிமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நியாயாதிக்கத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

03. i. பின்வரும் சட்டங்களைப் பெயரிடுக.

(அ) 1952 இல 44

(ஆ) 1971 இல 44

(இ) 1973 இல 44

(ஈ) 1979 இல 44 (புள்ளிகள் 02×4 = 08)

ii. மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் குடும்ப நியாயாதிக்கத்தின் கீழ் விசாரிக்கப்படும் வழக்குகள் யாதென்பதை விளக்குக. (12 புள்ளிகள்)

04. i. ரிட் ஆணைகள் என்பதன் மூலம் கருதப்படுவது யாதென்பதை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. ரிட் ஆணை வகைகளை பெயரிட்டு அவற்றின் தன்மையை விளக்குக. (12 புள்ளிகள்)

iii. ரிட் ஆணைகளை வழங்குவதற்கான நியாயாதிக்கம் தொடர்பில் இலங்கை அரசியலமைப்பில் காணப்படும் ஏற்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

05. i. இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட மேல் நீதிமன்றங்களை விபரிக்க. (10 புள்ளிகள்)

ii. மேல் நீதிமன்றத்தின் குற்றவியல் நியாயாதிக்கத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

06. ‘‘முஸ்லிம் சட்டம் சமய மூலாதாரங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது’’ கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

07. கண்டியச் சட்டம் மற்றும் தேசவழமைச் சட்டம் ஏற்புடமையாகும் முறையை விளக்குக. (20 புள்ளிகள்)

************